www.tamilarangam.net

# புதிய ஜனநாயகப் புரட்சி ஏன்?

சமுத்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய ஜனநாயகப் புரட்சி ஏன்?

சமுத்திரன்

ஆய்வகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

O முதற்பதிப்பு — 1986 பங்குனி
O வெளியீடு எண். 2
O விலை ரூபா 5-00

O ஆய்வகம்
O யாழ்ப்பாணம்

## பதிப்புரை

தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டம் இன்று தேசிய அளவிலும் சர்வதேசிய மட்டத்திலும் ஒரு புதிய நிலையை அடைந்துள்ளது. தமிழீழமக்கள் அனைவரினதும் பொதுஎதிரியான சிங்கள பேரினவாத பாசிசஅரசு, தமிழீழத்தின் பிரதேசங்களை முழுமையாகக் கைப்பற்றும் மிலேச்சத்தனமான நோக்கததுடன் தமிழீழமக்களை தினமும் கொன்றுகுவித்து வருவதுடன் அவர்களது சொத்துக்களை அழித்தும் மற்றும் எல்லாவகையான கொடுமைகளை செய்தும் வருகின்றது. சிங்கள பேரினவாதஅரசின் காட்டுமிராண்டித்தனமான இவ்வொடுக்குமுறை, தமிழீழ தாயகத்தை நேசிக்கின்ற அனைத்து மக்கள் பிரிவினரையும் தமது தாயகத்தைமீட்டு தமது சொந்த அரசை நிறுவும் தேசிய விடுதலைப்போரில் தவிர்க்கவியலாதவாறு ஒன்றிணைத்துள்ளது. இந்தப் புரட்சிகர நிலைமை எமது வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாதது தென்னாசியப் பிராந்தியத்திலும்கூட முன்னோடியானது.

எமது போராட்டமானது முன்னொருபோதும் இல்லாத புதிய நிலையை அடைந்துள்ளபோதும், அது தனது இறுதி வெற்றியை அடைவதற்கு இன்னும் நீண்டதூரம் பயணம் செய்யவேண்டியுள்ளது; பல தடைகளைத் தாண்டவேண்டியுள்ளது. தேசிய ஒடுக்குமுறைக்கெதிராக எமது மக்கள் கடந்தகாலத்தில் நடாத்திய எல்லாவகைப் போராட்டங்களும் எமக்குப் பயனுள்ள அனுபவங்களை வழங்கியுள்ளன. நாம் வெற்றியை நோக்கி முன்னேறுவதில் எமது கடந்தகால சொந்த அனுபவங்களையும், பல்வேறு நாடுகளின் மக்கள் விடுதலைக்காக நடாத்திய போராட்டங்களின் அனுபவங்களையும் தொகுப்பது இன்று அவசியமாகிறது.

உலகவரைபடத்தில் இந்துசமுத்திரத்தில் மிதக்கின்ற முத்தான இந்தத்தீவில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுந்து நிற்கின்ற மகத்தான மக்கள் என்ற பெருமைப் பதாகையை நாம் தாங்கிநிற்கின்றபோதிலும், எமது போராட்டத்தில் எமது வெற்றிக்கு குறுக்கே நிற்கின்ற எமது பலவீ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணங்கள் என்ன என்பதையும் நாம் ஆழமாக ஆராய்வேண்டியவர்களாக உள்ளோம்.

உலகின் மிகப்பிற்போக்கான அரசுகளில் ஒன்றான சிங்களபேரினவாத அரசோடு போராடுகின்ற நாம், எல்லாவற்றுக்கும் முதன்மையாக எமது மக்களை உருக்குப் போன்ற ஐக்கியத்தில் வளர்த்தெடுக்கத் தவறுவோமாகில் நாம் துக்ககரமான முடிவுகளை அடையநேரிடும். இன்று நாம் கண் முன்னால் காணுகின்ற, தேசிய விடுதலைச் சக்திகளுக்கிடையிலான பிளவு, பரந்துபட்ட மக்களுக்கும் அவர்களுக்கும் இடையிலான பாரிய இடைவெளி, மக்கள் இறுக்கமாக ஐக்கியப்படாமை என்பன எமது போராட்டத்தை முன்னெடுத்துச்செல்லவிடாது தடுக்கின்ற தடைகளாகும். இதற்கான அடிப்படைக்காரணங்கள் ஆராயப்படவேண்டும்.

எமது சமூகம்பற்றிய சரியான விளக்கமின்மை, எமது போராட்டத்தின் சாராம்சத்தை விளங்குவதில் தவறிழைக்க வைக்கலாம். எனவே எமது போராட்டத்தின் புரட்சியின் இன்றைய தன்மையை சரியாக விளங்குவதும், அதன் அடிப்படையில் சரியான அரசியல் மார்க்கம், கொள்கைகள், தந்திரோபாயங்கள் என்பவற்றை வகுப்பதும், அவற்றை சரியாக நடைமுறையில் கையாளக்கூடிய அரசியல் தலைமைச்சக்தி எது என்பதை இனங்கண்டு அதை வளர்த்தெடுப்பதும் இன்றைய அவசிய அவசரத்தேவையாகும்.

இந்த நோக்கத்தை அடைவதை உதவுவதில் நண்பர் சமுத்திரன் எழுதிய ''புதிய ஜனநாயகப்புரட்சி ஏன்?'' என்ற இக்கட்டுரை அனைத்து தேசிய விடுதலைப் போராளிகளுக்கும் பரந்துபட்ட பொதுமக்களுக்கும் பயனளிக்கும் என்று கருதுகின்றோம். கட்டுரையின் கருத்துக்கள் இறுதி முழுமையை எய்தியவை என்ற முடிவுடன் இதை நாம் உங்கள் முன்வைக்கவில்லை. கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டதுபோலவே மேலும் விவாதிக்கப்பட்டு இக்கருத்தை செழுமைப்படுத்தவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்புமாகும்.

ஆய்வகம்
யாழ்ப்பாணம்.

**வாசகருக்கு,**

கருத்துப் பரிமாறலை நோக்காகக் கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்ல அதன் உடனடிக்கடமைகள் பற்றிய தெளிவு அவசியமென பல போராளிகள் உணரத்தொடங்கியுள்ள இவ்வேளையில் இந்த உடனடியான கடமைகள் ஜனநாயக ரீதியானவை என்பதையும் அவற்றை சோஷலிசத்தின் முன்னோடியான புதிய ஜனநாயகப்புரட்சியின் நிலைப்பாட்டிலிருந்து வரையறுத்தல் அவசியமென்பதையும் வலியுறுத்தும் நோக்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பல விவாதிக்கப்பட வேண்டியனவாயிருக்கலாம். தமிழீழத்தின் புதிய ஜனநாயகப்புரட்சியின் உள்ளடக்கம் என்ன என்பதுபற்றி கொள்கைபூர்வமான விவாதம் அவசியம். குறிப்பாக கிராமிய உற்பத்தி உறவுகளில், சமூக அமைப்புக்களில் எத்தகைய மாற்றங்களை நாம் விரும்புகின்றோம் இவற்றின் சாத்தியப்பாடுகள் என்ன என்பது பற்றிய தெளிவான கருத்துக்கள் வேண்டும். இதற்கு நமது சமூகம் பற்றிய ஆய்வுகள் மேலும் தேவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐக்கிய முன்னணியின் கொள்கை அடிப்படைகள் என்ன? அதன் வேலைத்திட்டத்தில் கிராமிய சீர்திருத் தங்களுக்கு எத்தகைய இடம் கொடுக்கப்படவேண்டும்? இந்தச் சீர்திருத்தங்கள் என்ன? இடைக்கால பொரு ளாதாரக் கொள்கை என்ன?

இந்த வேலைத்திட்டம் தமிழ்ஈழமுஸ்லிம் மக்களை வி டு லைப்போரில் எப்படி சமபங்காளிகளாக்குகிறது? மலைய த் தமிழரின் போராட்டத்துடன் இணைவதெப்படி? சிங்கள முற்போக்குசக்திகளை அணுகுவதெப்படி?
சிங்கள மக்களின் எழுச்சியற்ற நிலையில் தமிழ்ஈழம் புதிய ஜனநாயகத்தையும் தாண்டி சோஷலிசத்தை நோக்கி போகமுடியுமா?

புரட்சிகரக்கட்சி—ஐக்கிய முன்னணி இந்த உறவின் தன்மைகள் என்ன? இத்தகைய கேள்விகள் பல சிறீ லங்கா அரசின் தன்மைகள்பற்றிய கேள்விகளும் பல. இவையெல்லாம் விவாதிக்கப்பட வேண்டியவை. இந்தக்கட்டுரை இந்த ஆக்கபூர்வமான நோக்குடன் எழுதப்பட்டுள்ளது. விவாதங்கள் தொடரட்டும்.

சமுத்திரன்

# 1

தமிழ்ஈழ விடுதலைப் புரட்சியின் உடனடியான கடமை கள் மக்கள் ஜனநாயகத்துடன் தொடர்புள்ளவை என்பதில் சில இயக்கங்களின் சில மட்டங்களிடையே ஓரளவு உடன் பாடு இருப்பதுபோல் தெரிகிறது. ஆயினும் பல விடுதலை இயக்கங்கள் 'சோஷலிச ஈழம்' என்ற சுலோகத்தை விளக்க முற்படும்போது விடுதலைப் போராட்டம் உடனடியாக ஒரு சோஷலிச அமைப்புக்கு வழிவகுக்கும் என்ற முடிவான கருத்தினையே முன்வைக்கின்றன. NLFTஇன் அரசியல் கொள்கை பற்றிய எனது கட்டுரையில் (இலக்கு - 4) குறிப் பிட்டதுபோல் 'சோஷலிச ஈழம்' என்பதன் அமைப்பு பற்றிய தெளிவான விளக்கமெதையும் இவ்வியக்கங்கள் இதுவரை முன் வைக்கவில்லை. தமிழ் ஈழத்தினதும் அது இன்றுவரை அங்கமாக விளங்கும் இலங்கை என்ற முழு அமைப்பினை தும் இன்றைய சமூக, பொருளாதார நிலைமைகளின் அடிப் படையில் இந்தப் பிரச்சனையை அணுக முற்பட்டுள்ள இயக் கங்கள் ஒருசிலவேயாகும்.

''சோசலிஷப் புரட்சி'' எனக் கோஷமிடுதல் சிலரைப் பொறுத்தவரை ஒருவித கவர்ச்சிப் பாங்காகி விட்ட . இன் றைய நிலையில் மக்கள் ஜனநாயகத்தின் தேவைகளை புதிய ஜனநாயகப் புரட்சிக் கோட்பாட்டின் உதவியுடன் வரையறுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவோ விளக்கவோ முற்படுவோர் சற்று 'பின்தங்கியவர்கள்' போல் தென்படலாம். புதிய ஜனநாயகப் புரட்சி என்றதும் ஒருசில வட்டங்களில் ''இது ஒரு மாஓயிச குறைபாடு'' என்றும் ''நாம் என்ன அரைக்காலனித்துவ அரை நிலப்பிரபத்துவ சீனவிலா வாழ்கிறோம்?'' என்றும் பேசப்படுகிறது. இது மிகவும் மேலெழுந்தவாரியான சிந்தனையின் வெளிப்பாடு என்ற போதும் இதன் அடிப்படையில் முக்கிய கேள்விகள் இருப்பதை மறுக்க முடியாது. சோஷலிசத்துக்கும் சோஷலிசப் புரட்சிக்கும் தெளிவற்ற பொதுமையான வாசகங்களையும் சூத்திரங்களையும் சில இயக்கங்கள் இறுதி விளக்கமாக முன் வைக்கின்றன. இதைப்போலவே மக்கள் ஜனநாயகம் பற்றியும் புதிய ஜனநாயகம் பற்றியும் சிலர் மிகவும்பொதுப் படையான சூத்திரங்களை முன் வைக்கின்றனர். சோஷலிச இலட்சியத்தை நமது சமூகம் அடைவதற்கு புதிய ஜனநாயகக் கட்டம் ஏன் அவசியமான தென்பதை வரலாற்றுப் பார்வையில் நமது நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குதல் அவசியமாகிறது. இத்தகைய விளக்கத்தைப் பெற நம்மிடையே தொடர்ச்சியான விவாதங்கள், கருத்துப் பரிமாறல்கள் அவசியம். இவ்விவாதங்களும் கருத்துப்பரிமாறல்களும் சரியான தத்துவார்த்த அடிப்படையிலும் இது வரையிலான புரட்சிகர சமூக மாற்றங்களின் அனுபவங்களின் விமர்சன ரீதியான மதிப்பீடுகளிலும் வேரூன்றியிருக்க வேண்டும். மார்க்ஸ் - லெனின் - மாஓ கோட்பாடுகளை விளக்கங்களின் பிரதியீடுகளாக முன்வைப்பதில் பயனில்லை. இவர்களின் இயங்கியல் அணுகுமுறையின் உதவியுடனும், சிந்தனைகளின் ஒளியிலும் நமது நிலைமைகளை ஆராய்வதே விளக்கங்களைத் தேட உள்ள ஒரே ஒரு வழி. இது கடினமானதென்பதற்காக குறுக்கு வழிகளைத்தேடிப் பயனில்லை. ஒருவருக்கெதிராக இன்னொருவர் மேற்கோள்களை உருப்போட்டுப் பூச்சாண்டி காட்டுவதால் நமது போராட்டம் பற்றிய அறிவு வளரப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய கட்டமென்ன என்ற கேள்வி நம்மை ஒரு மரபுரீதியான விவாதத்



திற்குள் இழுத்துச் சென்றுவிடுகிறது. இதுதான் பின்னடைந்த நாடுகளின் புரட்சிகர இயக்கங்களிடையே நீண்டகாலமாக நடந்துவரும் 'உடனடியாக சோஷலிசம் அல்லது ஜனநாயகப் புரட்சியை பூரணமாக்கி சோஷலிசப் புரட்சியை முன்னெடுப்பதா' என்ற விவாதம். இதைப்பலர் 'ஒரு கட்டப் புரட்சி' - 'இருகட்டப்புரட்சி' விவாதமெனச் சுருக்கிக் கூறுவர். இதுவே பல சந்தர்ப்பங்களில் ''ஸ்டாலினிஸ்டுகள்'' - ''ட்ரொட்ஸ்கியுஸ்டுகள்'' விவாதமாகவும் உருவெடுக்கிறது. இன்றுநாம் இத்தகைய விவாதத்தளமொன்றுக்குள் தள்ளப்படுவது துரதிஷ்டமானதே. பழைய விவாதங்களிலிருந்து நாம் பல பாடங்களைப் படித்துக் கொள்ளலாம். ஆனால் துரதிஷ்டவசமாக இந்தப்பழையமரபு விஞ்ஞானரீதியான தத்துவார்த்த தளத்திலிருந்தும் நடைமுறைத் தேவைகளிலிருந்தும் படிப்படியாகஅந்நியமாகி விட்டதால் அது ஆக்கபூர்வமான விவாதங்களுக்குக் களம் அமைக்கக் கூடிய சக்தியை இழந்துவிட்டது. ஆகவே அதன் நல்லம்சங்களைப் பெற்றுக் கொண்டு புதிய மரபினைத் தேடுதலே இன்றைய கடமை. இந்த நூற்றாண்டின் தலை சிறந்த - புரட்சிகரத் தலைவர்களும் சிந்தனையாளர்களுமான லெனினும் மாஓவும் இதை ஒத்த நடைமுறையையே கொண்டிருந்தனர்.

நமது போராட்டத்தில் புதிய ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கு மிடையே என்ன உறவு? புதிய ஜனநாயகம் இன்றி ஏன் சோஷலிசத்தை நோக்கி நகர முடியாது? இந்தக் கேள்விகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றிற்கான விளக்கமான பதில்களைத் தேடும் போது சோஷலிசம் என்னும் போது நாம் எதை மனதில் கொண்டுள்ளோம் என்ற கேள்வியும் எழுகிறது. இதற்கு நாம் தரும் பதிலைப் பொறுத்தே சோஷலிசம் - புதிய ஜனநாயகம் என்னும் உறவினை ஆராய்வதற்கான தத்துவார்த்தரீதியான நடைமுறை பூர்வமான அடிப்படையை வரையறுக்கமுடியும். ஆகவே கோட்பாட்டு ரீதியில் இன்றைய போராட்டத் தேவைகள் நம்மை சோஷலிசம் பற்றிய விளக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கத்திற்கே முதலில் எடுத்துச் செல்கின்றன. சிந்தனே மட்டத்தில் ஒரு இலட்சிய அமைப்பினே வகுத்து அதை ஒரு இலக்காக்கி அதையடையும் கட்டங்களே வகுக்கப் பின்னேக்கி வருதல் சிலரால் கருத்துமுதல் வாத அணுகுமுறை என்றோ அல்லது வரலாற்றை Teleological ஆகநோக்கும் விதமென்றோ விமர்சிக்கப்படலாம். எதிர்கால வரலாற்றுக்குக் கற்பனுர்த்தமான பாதைவகுத்து அதன் மைல் கற்களேயும் கட்டங்களேயும் கொள்கையொன்றுக்கமைய வரையறுத்தல் இன்றைய யதார்தங்களுடன் சம்பந்தமின்றியிருப்பதால் கருத்து முதல் வாதமே. ஆனல் இங்கு நாம் அத்தகைய ஒரு அப்பியாசத்தில் ஈடுபடவில்லே.

சோஷலிசமே இன்றைய கட்டமென்போர் வரலாற்றுக்கு நேர்கோடொன்றை மட்டுமே வகுத்து அதன் அடிப்படையிலான கருத்தமைவு ரீதியில் (ideological) செயல்படுவதால் கருத்துமுதல் வாதிகளாகிறுர்கள். இதுவரையிலான வரலாறு நமக்குக் கையளித்துள்ள நிலேமையிலிருந்தே இனிமேலாக வரலாற்றை உருவாக்க வேண்டும். கருத்து மட்டத்தில் எவ்வளவுதான் அழகாகவும் நியாயமானதாகவும் ஒரு இலட்சிய சமூகத்தின் மாதிரி இருந்தாலும் அதற்கான முன் நிபந்தனேகளேப் பூர்த்தி செய்ய இன்றைய நிலேமைகளால் முடியுமா முடியாதா என்ற கேள்விக் கூடாக நாம் யதார்த்தத்துக்குத் திருப்பப் படுகிறேம். இந்த யதார்த்தத்துக்கும் அந்த இலட்சிய சமூகத்திற்குமிடையேயுள்ள தூரத்தையும் உறவையும் நிகழ்கால நிலேமையின் புறநிலே பூர்வமான அறிவின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள பொருள்முதல்வாத இயங்கியல் பயன்படுகிறது.

சோஷலிசம் பற்றி பொதுவாக அரசியல் இயக்கங்களிடையே காணப்படும் வியாக்கியானம் இப்போ நடைமுறையிலிருக்கும் 'சோஷலிச' நாடுகளே அடிப்படையாகக் கொண்டதே. சோஷலிசம் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் ஒரு அமைப்பு, இதைக்காண சோவியத் யூனியனேயோ, கியூபாவையோ அல்லது சீனவையோ பாருங்கள் என 'சோஷலிச வாதி'கள் பலர் சொல்வர். இன்று நாம் காணும் இந்த 'சோஷலிச' நாடுகளின் அமைப்பையே சோஷலிசத்துக்கான பொது விளக்கமாகவும், இதைப் பின்பற்றியே 'சோஷலிச ஈழமும்' அமைக்கப்படும் எனச்சில இயக்கங்கள் சுலபமாக கூறிவிடுகின்றன. சிலர் இப்படிச் சொல்வதென்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் அமைப்பை அப்படியே திருப்பி ஆக்குவதல்ல. நமது நிலேமைகளுக்கமைய மாற்றங்கள் செய்யப்படும் என்று தம் விளக்கத்தை தகைமைப்படுத்துவதுண்டு.



இப்படியாக சோஷலிசத்துக்கு வரைவிலக்கணம் கொடுத்தல் சோஷலிசமே நமது உடனடித் தேவை மட்டுமல்ல அது உடனடியாகச் சாத்தியமானதும் கூட என்ற அரசியல் நிலேப்பாட்டை நியாயப்படுத்த உதவுகிறது. இதுவே ''மார்க்கிசம் - லெனினிசம்'' எனப் பிரகடனப்படுத்தப்படுகிறது. இத்தகைய கருத்தமைவுக்கு சர்வதேச ரீதியிலும் ஓரளவு அங்கீகாரமிருப்பதால் அதைப் பெறுவதற்காகவும் பல இயக்கங்கள் தமது 'சோஷலிசத்தை' இப்படி விளக்கி விடுவதோடு திருப்திப்படுகின்றன.

ஆனல் சோஷலிசத்துக்கு மார்க்சின் சிந்தனேகளின் அடிப்படையிலான பிறிதோர் விளக்கத்தைக் கண்டு நமது நிலேமைகளிலிருந்து அத்தகைய தன்மைகள் கொண்ட சோஷலிசத்தை அடைய எத்தகைய முன் நிபந்தனேகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என நோக்குவோமாயின் அது இன்றைய 'சோஷலிச' அமைப்புகள் பற்றிய விமர்சனத்துக்கும் வழிகோலும்.

மார்க்ஸ் சோசலிஷத்தை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவத்துக்கும் அப்பாற்பட்ட ஒரு அமைப்பாகவே கண்டார். அவர் சோஷலிசம் பற்றி ஒரு முழுமையான விளக்கத்தை விட்டுச் செல்லாத போதும் அதற்கான முன் நிபந்தனேகள் பற்றி நிறையச் சொல்லி உள்ளார். முதலாளித்துவ அமைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பின் இயக்க விதிகளைக்கண்டு பிடித்து அவற்றின் செயற்பாடுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கூடாக முதலாளித்துவ அமைப்பின் அபிவிருத்தி, எல்லைகளை வெளிப்படுத்தும் தர்க்க ரீதியான போக்கினை சித்தாந்தமயப் படுத்தினார். முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடான மூலதனம் - உழைப்பு முரண்பாட்டின் விளைவாக உற்பத்தி சக்திகள் அபார வளர்ச்சியைப் பெறுகின்றன. முதலாளி உபரி உழைப்பை அதிகரிக்க முயற்சிக்கிறான், அணிதிரண்ட தொழிலாளர் வர்க்கப் போராட்டத்துக்கூடாக [பொருளாதார மட்டத்தில்] தம் கூலி உயர்வுக்கும், ஜனநாயக உரிமைகளுக்கும் போராடுகிறார்கள். இந்த முரண்பாடு முதலாளிகளை உழைப்பைச் சேகரிக்கும் புதிய தொழில் நுட்பங்களை நோக்கித் தள்ளுகின்றது. முதலாளித்துவ விருத்தியானது தொடர்ச்சியான ஒரு தொழில் நுட்பப் புரட்சியைக் கட்டவிழ்த்து விடுகிறது. உற்பத்தித்திறனை அதிகரித்து தன்லாப நோக்கங்களை ஈடேற்ற மூலதனம் சகல வழிகளையும் கையாள்கிறது. உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு பண்டத்தின் பெறுமதியைக்குறைப்பதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி அவசியமாகிறது.

இந்த நிலைமைகள் உற்பத்தி சக்திகளின் அபார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் சோஷலிசப் புரட்சிக்கான பௌதீக அடிப்படையைத் தோற்றுவிக்கின்றன. மனித பண்பாட்டு பெறுமதிகளின் (Use Values) போதாமை நிலவும் நிலைமைக்கும் சோஷலிசத்துக்கும் எட்டாப் பொருத்தம் எனமார்க்ஸ் கூறினார். இவற்றின் மிகுதியான உற்பத்தியைத் தரும் ஆற்றல் கொண்ட உற்பத்தி சக்திகளே சோஷலிச நிர்மாணத்தின் அடித்தளம். ஆகவே முதலாளித்துவத்துக்கூடான உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி சோசலிஷத்துக்கான முன் நிபந்தனைகளின் மிக முக்கியமான தொன்றைப் பூர்த்தி செய்கிறது. சோஷலிசப் புரட்சிக்கு இது அவசியம் (Necessary) ஆனால் இது மட்டுமே பூர்த்தி செய்யப்படுவது பாட்டாளி வர்க்கம் ஆட்சியைப்பெறப் போதுமானது (Sufficient) அல்ல.



முக்கியமான அரசியல், அகநிலை, ஸ்தாபன தேவைகள், பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதுவரை தன் உழைப்பின் சுரண்டலால் இராட்சத பலத்தைப் பெற்றுவிட்ட உற்பத்தி சக்திகளை தன்வசமாக்கியே பாட்டாளி வர்க்கம் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க முடியும். இதற்காகப் புரட்சி அவசியம்.

புராதன பொதுவுடைமை சமுதாயங்களுக்குப்பின் உழைப்புச் சுரண்டல் அற்ற முதலாவது அமைப்பாக சோஷலிசத்தை மார்க்ஸ் கண்டார். இதற்கு அவசியமானது உற்பத்தி சாதனங்களும் உழைப்பு சக்தியும் பண்டங்களாக விற்கவும் வாங்கவும்படும் நிலை அழிக்கப்படுவதாகும். அதே நேரத்தில் உற்பத்தியாளரின் கூட்டான முகாமைக்கு தொழிற்போக்கைக் கட்டுப்படுத்தும் உறவுகளையும் உருவாக்கவேண்டும். இந்த நிலைமைகளில் முதலாளித்துவத்தின் அடிப்படை விதியான பெறுமதி விதி (Law of Value) செயலிழந்து ஒரு மறைந்த கால வரலாறாகி விடுகிறது. உற்பத்தி சாதனமும் உழைப்பும் இப்படியாக மீள் இணைப்புச் செய்யப்படும்போது அந்நியமாதலின் அடிப்படைகள் மறைகின்றன. இங்குதிட்டமிடலின் நோக்கம் போதாமையை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியதல்ல. மக்களின் பயன்பாட்டுப் பெறுமதிகளைப் போதியளவு உற்பத்தி செய்யும் ஆற்றல் மிகுந்த உற்பத்தி சக்திகளை சமூகநலன்களுக்கமைய எப்படி நிர்வகித்தல் மேலும் வளர்த்தெடுத்தல் என்பதும் புதிய கலாசாரத்தை உருவாக்கும் வழி வகைகளும் முக்கியமடைகின்றன. அடிப்படை உற்பத்தி நிறுவனங்கள் சுதந்திரமான உற்பத்தியாளர்களின் கூட்டுறவில் கட்டியெழுப்பப்பட வேண்டுமென மாக்ஸ் கனவுகண்டார்.

வளர்ச்சி பெற்ற நாடுகளில் சோஷலிசப் புரட்சி வெடிக்கவில்லை. அதற்கான அறிகுறிகள் இதுவரை இல்லை. ஆகவே மாக்சின் தீர்க்க தரிசனம் பொய்யாகி விட்டது எனப்பலர் முடிவெடுத்து விட்டார்கள். இதுபற்றி, மார்க்சின் தீர்க்கதரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனம் நிறைவு பெருமைக்கான காரணங்கள் மார்க்சிய அடிப்படையிலேயே பலரால் விளக்கப்பட்டுள்ளன. இங்கு இது வல்ல பிரச்சனை. வளர்ச்சி பெற்ற நாடுகளில் சோஷலிசப் புரட்சி இதுவரை இடம் பெறாதது சோசலிசத்துக்கான அடிப்படைகளென மார்க்ஸ் முன்வைத்த நிபந்தனைகளைப் பொய்யாக்கி விடவில்லை.

முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகப் பரிணமித்த பின் உலக அமைப்புக்குள் வளர்ச்சி குன்றிய பின்னடைந்த நாடுகளிலேயே புரட்சிகள் தோன்றியுள்ளன. தொடர்ந்தும் இடம் பெறுகின்றன. இப்புரட்சிகளைச் சோஷலிசப் பாதையில் வழி நடத்த கம்யூனிஸ்டுகள் விழைகின்றனர். இப்பிரயத்தனத்தில் பல முரண்பாடுகளை இதுவரையிலான அனுபவங்கள் வெளிப்படுத்தியுள்ளன. சோஷலிசத்துக்கு அவசியமான முன்நிபந்தனையான உற்பத்தி சக்திகளின் அபரித வளர்ச்சி இல்லாத நாட்டில் புரட்சி இடம்பெறும்போது வெறும் அரசியல் திடசித்தத்தினால் மாத்திரம் சோஷலிசத்தை உடனடியாக அமைத்துவிட முடியாது. ஆகவே உற்பத்தி சக்திகளை சோஷலிச மாற்றத்துக்கமைய வளர்த்தெடுக்கும்பணி ஒரு இடைக்காலத் திட்டமாக வகுக்கப்பட வேண்டிய அவசியமேற்படுகிறது. இந்தப் பொருளாதார ரீதியான வளர்ச்சிக்குரிய மார்க்கத்தைத் தேடும்போது புரட்சியை முன்னின்று நடத்திய இயக்கத்தினதும் மக்களினதும் அரசியல் திடசித்தத்தைத் திசைதிருப்பாத ஒரு பாதையையே தேர்ந்தெடுக்க வேண்டும். இதைச் சாதிப்பதற்குப் புரட்சியின் நிரந்தரதன்மையைப் பேணவேண்டும். புரட்சி தொடர்ச்சியாக பல மட்டங்களிலும் இயங்கும் வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

**சோஷலிசத்துக்கான முன் நிபந்தனைகளான உற்பத்தி சக்தியின் வளர்ச்சி, அரசியல், சமூக கலாசார வளர்ச்சி ஆகியவற்றைப் பூர்த்தி செய்யும் இடைக்காலக் கட்டமே புதிய ஜனநாயகப் புரட்சியின் காலம்** சில சந்தர்ப்பங்களில் - உதாரண



மாக சீனா இதற்கான ஆரம்பம். அரைக்காலனித்துவ அரை நிலப்பிரபுத்துவ நிலைமைகள் நமது நிலைமைகள் இதிலிருந்து வேறுபட்டவை. ஆயினும் சோஷலிசப் புரட்சிக்கு அவசியமான முன் நிபந்தனையான உற்பத்தி சக்திகள் பூர்த்திசெய்யப்படாத அத்துடன் கலாச்சார விருத்திகுன்றிய நிலையிலேயே நமது சமூகம் உள்ளது. ஆகவே நமது சமூகமும் அதற்கேயுரிய புதிய ஜனநாயகப் புரட்சிக்கூடாகப் போயே ஆகவேண்டும். உண்மையான சோஷலிசத்தை உத்தரவாதப்படுத்த இது அவசியமாகிறது.

பொருளாதார, கலாச்சார ரீதியில் பின்னடைந்த சமூகத்தில் புரட்சிகர மாற்றம் இடம்பெறும்போது மக்களின் சமூக உணர்வில் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் ஏற்படுகிறது. பழைமையின் பிற்போக்கான அம்சங்களிடமிருந்து விடுபட்டு புதுமையைத் தேடும் திறந்த மனதைப் புரட்சி மக்களிடையே ஏற்படுத்த உதவுகிறது. மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிகள் நிச்சயமாக புதிய சமூகத்தை உருவாக்க மக்களின் ஆற்றலை ஒருங்கிணைத்து விடுவிக்கின்றன. ஆனால் இந்தப் புரட்சிகரப் பாய்ச்சல் உற்பத்தி சக்திகளைப் பொறுத்தவரை ஒரு முன்னோக்கிய பாய்ச்சலை அதே வேகத்தில் ஏற்படுத்தப் போவதில்லை. போதாமையும் சமூகத்தின் பொருளாதாரப் பின்னடைவுகளும் உடனடியாக தாமாக மறைந்துவிடப் போவதில்லை. அதே நேரத்தில் புரட்சிகர மாற்றம் சோஷலிசத்துக்கான முன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேறொரு பாதையை மக்களின் உணர்வு பூர்வமான பங்குபற்றலுடன் தேர்ந்தெடுத்து முன்னேறும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. சோஷலிச நிர்மாணத்துக்கான அடிப்படைகளை உருவாக்கும் இடைக்காலமே புதிய ஜனநாயகக் கட்டமென்று கூறுவது நிச்சயம் முதலாளித்துவத்தை ஒரு சமூக அமைப்பாக நிராகரிப்பதாகும். இந்தப் புதிய ஜனநாயகத்தின் உள்ளடக்கத்தின் முக்கிய பொதுத் தன்மையை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- இன்று நடைமுறையிலுள்ள 'சோஷலிச' அமைப்புக்களின் விமர்சனத்தின், நமது சமூகவரலாறு பற்றிய விமர்சனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சோஷலிச இலட்சியத்தில் நம்பிக்கை கொண்ட சக்திகளின் தலைமையிலான பரந்த ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றல். புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டம் முதன்மை பெறல் என்பதன் நடைமுறை இதுவே.

- புதிய ஜனநாயக காலகட்டத்தின் கடமைகளைப் பூர்த்தி செய்யவல்ல கருவிகளை (ஸ்தாபனங்களை) ஒருங்கிணைந்த அமைப்பாக ஒரு புரட்சிகர அரசை அமைத்தல். இந்த அரசின் அடிப்படை அலகுகள் மக்கள் மட்டத்தில் விடுதலைப் போராட்டக் காலத்திலிருந்தே உருவாக்கப்பட வேண்டும். இங்கு முக்கியத்துவம் பெறும் தேவைகளை அரசியல் பொருளாதார கலாச்சார அம்சங்களாகப் பிரித்துப் பரர்த்தல் அவசியமாயிருக்கும் அதே வேளையில் அவற்றின் தொடர்புகளையும் நடைமுறையில் இனங்காணுதல் அவசியம்.

- பொருளாதார மட்டத்தில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குதவும் உறவுகளை உருவாக்குதல், அவற்றின் சமச்சீரான வளர்ச்சியை உத்தரவாதப் படுத்துதல் பாரிய முதலீடுகளுக்கு வேண்டிய குவியலை ஏற்படுத்த அரச கருவிகளைப் பயன்படுத்தல் போன்றவை முக்கியம் பெறுகின்றன. சிறு உற்பத்தியாளர்களை ஒன்றிணைக்கும் சமூக அமைப்புக்களுக்கும் அரசுக்குமிடையிலான உறவை ஜனநாயக அடிப்படையில் வரையறுத்து சிறு உற்பத்தி துறையின் தன்மையிலான மாற்றத்துக்கும் அத்துறையிலிருந்து மற்றையபுதிய பாரிய துறைகளுக்கு உதவக் கூடிய மூலதன மாற்றத்துக்கும் வழிவகுத்தல் புதிய ஜனநாயக காலப் பொருளாதாரக் கடமைகளுள் ஒன்று.

- இத்தகைய பொருளாதார நடவடிக்கைகள் பல்வேறு உற்பத்தித் துறைகளுக்கிடையேயுள்ள உறவுகளை சமூகத்



தேவைகளுக்கமைய பலப்படுத்த வேண்டும். மக்களின் அத்தியாவசிய நுகர்பொருட்களின் உற்பத்தியும் பங்கீடும் எந்த அளவிற்கு சந்தையில் தங்கி நிற்க வேண்டும் எத்தகைய கட்டுப்பாடுகள் உற்பத்தியைத் துரிதமாக்கும் என்பன பற்றிய தெளிவு அவசியம்.

- புதிய ஜனநாயக அரசு ஒரு இடைக்கால அரசு புரட்சியை சோஷலிசத்தை நோக்கி எடுத்துச் செல்வதற்கான அரசியல் பொருளாதார கலாச்சார நிர்மாணத்தின் தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது. ஆகவே இந்த அரசு புரட்சியின் நிரந்தரத்தை அதாவது தொடர்ச்சியைப் பேணும் அமைப்பாக விளங்க வேண்டும்.

புதிய ஜனநாயகப் புரட்சியின் இந்தப் பொதுத்தன்மைகளுக்கும் நமது சமூகத்தின் சமூக பொருளாதார கலாச்சார நிலைமைகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் காணலாம். இப்பொதுத் தன்மைகள் சிறீலங்கா சமூகத்திற்கும் நம்போன்ற வேறுபல பின்தங்கிய சமூகங்களுக்கும் பொருத்தமானவை. தென்னிலங்கையையும் விட தமிழ் ஈழப் பகுதிகளில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சி மிகவும் மந்தநிலையிலேயே உள்ளது. இதனால் நமது சமூகத்தில் மூலதனத்தின் குவியலால் ஒன்றிணைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கம் குறிப்பிடத்தகுந்த அளவில் இல்லை. இந்தப்புறநிலை பூர்வமான உண்மையின் மறுபக்கமே நாம்காணும் பலபிரதேசரீதியான வேறுபாடுகளும் நமது சமூக உறவுகளில் சாதி அமைப்பு உறவுகளின் பின்னல்களும் நமது கலாச்சாரத் தேக்க நிலையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2

அளவினாலும் சமூகத்தன்மையாலும் பலம் குன்றியதாயும் சமூக மாற்றத்தின் வீரியம் மிக்க தலையாய சக்தியாகவும் இயங்க முடியாத நிலையிலுள்ள நமது தொழிலாள வர்க்கத்தைப்பற்றிய சரியான அரசியல் கணிப்பு அவசியம். பாட்டாளிவர்க்க சிந்தனையை அரசியல் ரீதியில் மேலாதிக்கம் பெற வைப்பது எப்படி என்பது விடுதலை இயக்கத்தை எதிர்நோக்கும் சவாலாகும். நமது சமூகத்திலிருந்து அணி திரட்டப்படக்கூடிய முக்கிய போராட்ட சக்திகள் எவை? அவற்றின் இணைப்பை ஏற்படுத்தும் ஐக்கிய முன்னணியின் தன்மைகள் என்ன? இந்த இணைப்பிற்கு அடிப்படையாக அமையும் வேலைத்திட்டம் என்ன? என்ற கேள்விகளின் அடிப்படையிலேயே இந்தச் சவாலை எதிர்நோக்க வேண்டும்.

வர்க்க சமரசத்துக்கூடாக தமது நலன்களைப் பேணுவதில் கண்ணாயுள்ள தென்னிலங்கையில் வாழும் தமிழ் முதலாளிகளையும் அங்கு சொத்துக்கள் கொண்ட நடுத்தரவர்க்கத்தினரையும் தவிர தமிழ் இனத்தின் சகல வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் தேசியஇன ஒடுக்குமுறையிலிருந்து நிரந்தர விமோசனத்தை விரும்புகின்றன. ஒடுக்குமுறையின் தாக்கத்தில் வேறுபாடுகள் உண்டென்பதை மறுக்க முடியாது. பல்



வேறு சமூக மட்டங்களையும் சார்ந்தவர்களின் பொருளாதார வாழ்வின், வர்க்க நலன்களின் பாதிப்பும் பாசிசத்தன்மை கொண்ட இன அடக்குமுறையின் விளைவால் அவர்களுக்கு வேண்டிய சமூகரீதியான பாதுகாப்பும் அவர்களின் கவனத்தைப் போராட்டத்தின் மீது திருப்புகிறது. ஆனால் இந்தப் போராட்டத்தில் அவர்கள் தமக்கெனக்காணும் பங்கு அவர்களின் அரசியல் உணர்வின் தன்மையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. இந்த அம்சம் - அதாவது வெகுஜன அரசியல் உணர்வின் மட்டம் - விடுதலை இயக்கங்களின் நடைமுறைக்கு மிகவும் நெருங்கியதாகும். ஒடுக்கப்படும் பல்வேறு வர்க்கங்களையும் சார்ந்த மக்களை ஒரு பொது அடிப்படையில் அரசியல் மயப்படுத்திப் போராட்டத்துக்கு அணிதிரட்டுவதே ஐக்கிய முன்னணி அரசியலின் முக்கிய சாராம்சம். இதற்காகவே புரட்சியின் உடனடிக் கடமைகளைக் கிரகித்து அவற்றில் வெற்றிபெற உதவக்கூடிய குறைந்தபட்ச வேலைத்திட்டம் அவசியம்.

விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை சக்திகள் தமிழ் ஈழப்பிரதேசத்துக்குள்ளேயே இனங்காணப்பட வேண்டும். இவை நமது விவசாய, கடற்றொழில் துறைகளின் பல சமூக மட்டங்களிலிருந்தும், நகர்ப்புறங்களிலிருந்தும், இன ஒடுக்குமுறையால் தொழில் இழந்தோர், வேலை வாய்ப்பு கல்வி வசதிகள் மறுக்கப்பட்டோர் மத்தியிலிருந்தும் அணி திரட்டப்பட வேண்டியவை.

போராட்ட சக்திகளின் அணிதிரட்டலுக்கான கொள்கை பற்றி சிந்திக்கும்போது இரண்டு விடயங்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன.

1. தமிழ் ஈழமக்களின் பல்வேறு வர்க்கங்களையும் சேர்ந்தோர் தேசிய இன ஒடுக்குமுறை எனும் ஒரு பொதுக் கொடுமையின் விளைவாக தேசிய விடுதலையை விரும்புகின்றனர். இதே தேசிய இன ஒடுக்குமுறை வர்க்கங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை ஊடறுத்துச் செல்லும் தமிழ் தேசிய உணர்வுக்கு வித்திடுகிறது.

2. தமிழ் இனத்துக்குள்ளே வர்க்க முரண்பாடுகள், சாதி அடக்குமுறை பெண்ணுரிமை மறுப்பு என்பன இச்சமூகத்தின் அடிப்படைத் தன்மைகளை நிர்ணயிக்கின்றன. இவை பற்றிய நிலைப்பாடே இயக்கங்களின் புரட்சிகரத் தன்மையின், நேர்மையின் உரைகல்.

இவ்விரு மட்டங்களிலும் ஜனநாயக உரிமைகள் மீறப் படுகின்றன. இரண்டாவது மட்டத்தில் (அதாவது தமிழ் தேசிய இனத்திற்குள்ளே காணப்படும் முரண்பாடுகள்) இடம்பெறும் ஒடுக்குமுறைகள் பல தமிழ் இனத்தின் உயர் வர்க்கத்தவர், உயர்சாதியைச் சார்ந்தோராலேயே காலாதி காலமாகக் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்த ஒடுக்கு முறைகளை எதிர்க்காது அதற்குமாறாக அவற்றை மூடி மறைத்து தேசிய இன ஒடுக்குமுறை மட்டத்திலேயே 'விடு தலை' பற்றிப் பேசி வந்தது தமிழர் கூட்டணி. இவ்விரு மட்டங்களிலுமான ஒடுக்குமுறைகளை ஒழிக்கும் அரசியல் வேலைத்திட்டத்தை வகுத்து அதற்கேற்ப ஐக்கிய முன்னணி அமைத்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல் வதே புதிய ஜனநாயகப் புரட்சியின் பணியாகும். எக்கார ணத்தைக் கொண்டும் தமிழ் இனத்தின் உள்ளார்ந்த சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குப் பின்பு நடத்தப்பட வேண்டியது என்ற கருத்தைப் புதிய ஜனநாயகப் புரட்சி ஏற்க மாட்டாது. அதே நேரத்தில் சகல உள்ளார்ந்த முரண்பாடுகளுக்கும் சமமுக்கி யத்துவம் கொடுக்க முடியாது

இவ்விரு போராட்ட மட்டங்களையும் ஒன்றுக்கொன்று பாதகமானதாக ஆக்காது அதற்கு மாறாக ஒன்றுக்கு மற்றை யது உதவும் வகையில் அரசியல் வேலைத்திட்டத்தையும் வெகுஜன ஸ்தாபனங்களையும் அமைத்தல் அவசியம். தேசிய இன ஒடுக்குமுறை நமது சமூகத்துக்குள்ளே உள்ள ஒடுக்கு



முறைகளை முக்கியத்துவமிழக்க வைத்து விட்டதாகப் பலர் கருதினர். ஆனால் இன்று சொல்லளவில் 'சோஷலிசம்' பேசும் சில இயக்கங்கள் தமது நடைமுறையில் தமிழ் இனத் துக்குள்ளே ஒடுக்குமுறைகளையும் பூர்ஷ்வா ஜனநாயகத்துக் குக்கூடப்புறம்பான உழைப்புச் சுரண்டலையும் நடத்துவோ ருக்கு உடந்தையாயிருப்பதன் மூலம் உள்ளார்ந்த முரண் பாடுகளைக் கூர்மையாக்கியுள்ளன. இதன்மூலம் அவை தம் அரசியல் சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ள அதே வேளையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு சரியான புரட் சிகரத் தலைமை அவசியம் என்னும் பாடத்தையும் புகட்டி உள்ளன.

மேலே குறிப்பிட்ட இருமட்டங்களையும் இணைக்கும் அர சியல் வேலைத்திட்டம் பற்றிச் சிந்திக்கும்போது, இவ்விரு மட்டங்களினதும் நெருங்கிய தொடர்புகள் தெளிவாகின்றன. இத்தொடர்புகள் நமது காலனித்துவ கால குறைவிருத்தி வரலாற்றுக்கும் கடந்த 37 வருடகாலத்தில் நமதுமக்கள்மீது நவகாலனித்துவம், சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறை கள், தமிழ் சமூகத்துக்குள்ளே இருக்கும் பலவிதமானஒடுக்கு முறைகள் ஆகியவற்றின் தாக்கங்களுக்கும் நம்மை எடுத்துச் செல்கின்றன.

இவ்விரு மட்டங்கள் பற்றிச் சிந்திக்கும்போது இவை போன்று முக்கியத்துவம் பெறும் வேறொரு அம்சத்தையும் கணக்கிலெடுத்தல் அவசியம். அதுதான் வடகிழக்குப் பிர தேசங்களில் வாழும் முஸ்லீம் மக்கள் மொழியால் தமிழரா யினும் இவர்கள் மதத்தாலும் வாழ்முறையாலும் தமக்கெ னச்சில சிறப்பியல்புகளைக் கொண்டவர்கள். இம்மக்களின் தனித்துவம் எந்தவகையிலும் பாதிக்காத வகையில் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் பங்காளிகளாக அவர்களை வென்றெடுக்கும் வகையில் அரசியல் வேலைத்திட்டம் அமைய வேண்டும். முஸ்லீம் மக்களின் பாரம்பரிய நிலங்கள் பறி போய்க்கொண்டிருக்கின்றன. அரச பயங்கரவாதம் அவர்க ளையும் தாக்கத்தவறுவதில்லை. அவர்களும் ஒடுக்குமுறைக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளாகியுள்ளனர். முஸ்லீம் மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் முற்போக்கு சக்திகளுடன் பலமான கொள்கை ரீதியான இணைப்பை தமிழ்ஈழ விடுதலை சக்திகள் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய முற்போக்கு சக்திகள் முஸ்லீம் சமூகத்துக்குள்ளே ஜனநாயக மாற்றங்களுக்கு உதவும் வேலைத்திட்டங்களை முன் வைக்க வேண்டும்.

கடந்த பத்து வருடங்களின் அரசியல் போராட்ட நடைமுறைகள் தமிழ்ஈழ மக்களிடையே நிலவும் ஜனநாயக மற்ற உற்பத்தி உறவுகள் (குறிப்பாக விவசாய நிலச் சொத்து முறைகள், கடற்றொழில் துறையில் காணப்படும் உறவுகள்) சாதியமைப்பின் அநீதிகள், ஆண் ஆதிக்கம் போன்றவைபற்றிய விழிப்புணர்வு வளர உதவியுள்ளன. ஆனால் இத்தகைய மாற்றம் முழுக்க முழுக்க இயக்கங்களின் உணர்வு பூர்வமான செயற்பாடுகளால் மட்டும் ஏற்படவில்லை. பலவகையில் அவற்றின் தவறுகளாலும் அவற்றின் நடைமுறைகள் ஏற்படுத்திய சந்தேகங்களினாலும் சில இயக்கங்களின் இராணுவவாதப் போக்கு அவ்வியக்கங்களைப் பழைய தமிழ்த் தலைமையின் ஆயுதமேந்திய புதிய வடிவங்களாகக் காட்டியதாலும் ஏற்பட்டதெனத் துணிந்து கூறலாம். ''இவர்களின் தமிழ்ஈழத்தில்கூட நமது தாழ்த்தப்பட்ட நிலைமாறும் போலில்லை'' என்ற உணர்வு பலரை தமிழ் சமூகத்தின் உள்ளார்ந்த பிற்போக்குத் தன்மைகளை ஆழநோக்க வைத்துள்ளது. இயக்கங்களின் இராணுவவாதம், எதேச்சதிகார வன்முறை என்பன நடைமுறையில் தமிழ்சமூகத்தில் வேரூன்றியுள்ள ஜனநாயகவிரோத மரபுகளை மேலும் பலப்படுத்தவே உதவுகின்றன. அரசியல் மட்டத்தில் இயக்கங்கள் பற்றிய விமர்சனங்களை வெளியாக முன்வைத்து ஜனநாயகமுறையில் கருத்துப்பரிமாறல்களை செய்யும் சந்தர்ப்பமற்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்.

புதிய ஜனநாயகப் புரட்சியின் வேலைத்திட்டம் இவற்றையும் கணக்கிலெடுத்தே வகுக்கப்பட வேண்டும். ஒரு வேலைத்திட்டத்தை முன் வைப்பது இக்கட்டுரையின் நோக்க



மில்லை. ஆனால் சில முக்கியமான அம்சங்களைத் தொட்டுக் காட்டுதல் அவசியம்.

விவசாயத் துறையில் உற்பத்தி மட்டத்திலான ஜனநாயகமயமாக்கல் இன்று நிலவும் சொத்துரிமை முறைகளின் சீர்திருத்தத்துடன் ஆரம்பிக்க வேண்டும். இங்கு உடனடி நோக்கம் தனியுடமையை இல்லாதொழிப்பதல்ல. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும், உழைப்பாளர்களின் நலன்களுக்கும் தடைபோடும் உறவுகளை மாற்றியமைப்பதே குறுகிய கால நோக்கமாயிருக்க வேண்டும். பொருளாதார உறவுகளின் சீர்திருத்தம் தேசிய விடுதலைக்கு வேண்டிய பரந்த ஐக்கியத்தைப் பலப்படுத்தும் வகையில் கட்டங்களாக வகுக்கப்பட வேண்டும். இன்றைய கட்டத்தில் சிறு உற்பத்தியாளர்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ள வாணிப மூலதனத்தின் (Merchant Capital) [தரகர்களின் நடவடிக்கைகள்] நடவடிக்கைகளை மாற்றியமைத்தலும் அவசியம். இதற்கான மாற்று அமைப்புக்கள் வேண்டும். சந்தைப்படுத்தல், போதாமை மிகுந்த பிரதேசங்களுக்கு நுகர்பொருட்களை எடுத்துச் செல்லும் வழிவகைகளை அமைத்தல், உற்பத்தியாளருக்கு வேண்டிய உள்ளீடுகளைப் பெற்று விநியோகித்தல் போன்றவை இன்று அரசியல் ரீதியில் உடனடி முக்கியத்துவம் பெறுகின்றன. உள்நாட்டு யுத்தகாலத்தில் மக்களை அணி திரட்டுவதற்கும் இனவாத அரசின் அமைப்புக்களில் தங்கியிருத்தலை இல்லாதொழிக்கவும் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமாகின்றன. கடற்றொழில் துறையைப் பொறுத்தவரையும் இவை போன்ற நடவடிக்கைகள் அவசியம். மக்களின் அத்தியாவசியத் தேவைகளின் உற்பத்தியையும் பங்கீட்டையும் சிறீலங்கா அரச அமைப்புக்களிலிருந்து சுதந்திரமாக இயங்க வைக்கக்கூடிய சகலவழிவகைகளையும் கையாளுதல் அவசியம்.

இங்கு ஓரளவு பொதுப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைப் பிரதேச ரீதியில் செயல்திட்டங்களாக மாற்ற அவ்வப் பிரதேசங்களின் நிலைமைகள் பற்றிய ஆய்வுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவசியம். ஆரம்ப நடைமுறைகள் பரிசோதனைகளாக மேற்கொள்ளப்பட்டு அவற்றின் அனுபவங்களின் அடிப்படையில் புதிய சமூக நிறுவனங்களை அமைத்தலே சரியான அணுகுமுறை. சமீப காலங்களில் சில இயக்கங்கள் கிராமிய, நகர்ப்புற மட்டங்களில் மக்கள் அமைப்புக்களை உருவாக்க முற்பட்டுள்ளன. இவற்றின் அனுபவங்களை அலசி ஆராய்தல் பயன் தரலாம். பரந்த ஐக்கியத்துக்கூடாக மரபுரீதியாக வேரூன்றியுள்ள மக்கள் விரோத அதிகார அமைப்புகளுக்கு மாற்றமைப்புக்களை உருவாக்குவதில் வெற்றி பெறுதல் மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைக் கையாளும் விதத்திலேயே தங்கியுள்ளது. பிரதான எதிரிக்கும் அதற்கு உணர்வு பூர்வமாக உதபுபவர்களுக்கும் மட்டும் எதிராகவே பலாத்காரம் பயன்படுத்தப்பட வேண்டும். உள்ளார்ந்த முரண்பாடுகளைக் கையாள்வதில் சாத்வீக முறைகளே முதலிடம் பெற வேண்டும். முடிந்தவரை பலாத்காரம் தவிர்க்கப்பட வேண்டும். நகர்புறத்திலும் கிராமப்புறத்திலும் அடிமட்டங்களில் தொடர்ச்சியான அரசியல் கல்வியூட்டலுக்கூடாக மரபுரீதியான சிந்தனை ஆதிக்கத்தை தகர்ப்பதிலும் அம்மட்டங்களிடமிருந்து அவற்றின் தலைமையை உருவாக்குவதிலும் விடுதலை இயக்கம் கண்ணாயிருக்க வேண்டும்.

முஸ்லீம் மக்கள் மத்தியில் முற்போக்கு சக்திகள் இன்னும் தெளிவான ஸ்தாபன வடிவங்களைப் பெறவில்லை. தனிநபராக பல முஸ்லீம் இளைஞர்கள் விடுதலை இயக்கங்களில் சேர்ந்து போராடி வருகிறார்கள். ஆயினும் இத்தோழர்கள் முஸ்லீம் சமூகத்துக்குள்ளே ஏற்பட்டுவரும் விழிப்புணர்வுக்கு அரசியல் தலைமைதாங்கி அதனால் பரந்த அரசியல்நோக்குள்ள ஸ்தாபன வடிவத்தைக் கொடுக்க முற்படாதவரை அச்சமூகத்தின் பூரண பங்களிப்பைப் பெறமுடியாது. வடகிழக்கு முஸ்லீம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் பொதுவாக உள்ள பிரச்சினைகளின் அடிப்படையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அரசியல்திட்டம் இனிமேல்தான் உருவாக்கப்பட வேண்டும். நீண்டகாலமாக பெருமளவில் கொழும்பையும் முஸ்லீம் பெருவர்த்தகர்களின் நலன்களையும் அடிப்படையா



கக் கொண்ட ஒரு ''தேசிய'' தலைமையின் ஆதிக்கத்துக்குள்ளாயிருக்கும் வடகிழக்கு முஸ்லிம்கள் சமீபகாலங்களில் இத்தலைமையின் வர்க்க நலன்கள்பற்றி ஓரளவு விளக்கத்தை நடைமுறைக்கூடாக பெற்று வருகின்றனர். ஒருபுறம் சிங்கள இனவாத அரச பயங்கரவாதத்தின் கொடுமைகள் மறுபுறம் அந்த அரச பயங்கரவாதத்துக்கு சார்பான ''தேசிய'' (''அகில இலங்கை'') தலைமையின் கபடத்தனங்கள். இவையிரண்டுமே தமிழ்ஈழ முஸ்லீம்களுக்கு தமது விசேஷ பிரதேச நிலைமைபற்றிய உணர்வை ஏற்படுத்த உள்ளன. ஆனால் இந்த உணர்விலிருந்து முற்போக்கு ஸ்தாபனங்களின் அமைப்புவரை நீண்ட தூரம் உண்டு. இங்கேதான் ஏற்கனவே விடுதலைப் போரில் தனிநபர்களாக இறங்கியுள்ள முஸ்லீம் தோழர்களுக்கு ஒரு சரித்திரப்பணி காத்துக்கிடக்கிறது.

மலையகத் தமிழ் மக்களின் இனஉரிமைப் போராட்டத்துக்கும் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்துக்குமிடையிலான உறவு சில இயக்கங்களால் குழப்பியடிக்கப்பட்டுள்ளது. மலையகத்தமிழரின் போராட்டமும் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டமும் ஒன்றா? இல்லை என்பதே சரியான பதில். சில இயக்கங்கள் பதுளைப் பிரதேசத்தையும் தமிழ் ஈழத்துடன் இணைப்பதன் மூலம் மலையகத் தமிழரையும் தமிழ் ஈழப் போராட்டத்தில் இணைக்க முனைகின்றன. இதுமலையகத் தமிழரின் விருப்பின் பேரில் செய்யப்பட்ட ஒன்றல்ல. சில இயக்கங்கள் இப்படியான நடைமுறைக்கொவ்வாத பிரதேச இணைப்புக்கூடாக தமிழ் ஈழத்துக்குள் தொழிலாளர் வர்க்கமொன்றை இறக்குமதி செய்து விடுதலைப் போராட்டத்துக்கு ''பாட்டாளி வர்க்க தலைமை''யைத் தேடுகின்றனர். உண்மை நிலை என்ன? மலையகத்தமிழர் மத்தியில் மூன்று போக்குகளைக் காணலாம். ஒன்று, தாம் பல சந்ததிகளாக வாழ்ந்த மலையகமே தமது தாயகம். அங்கேயே சிங்களவர்களுடன் சமமாக உரிமைபெற்று வாழப் போராடல். இரண்டாவது, தமிழ்ஈழப் பிரதேசங்களுக்கு குடிபெயர்தல். மூன்றாவது, இந்தியாவுக்கு குடிபெயர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல். இந்தப் போக்குகளை மனதில் கொண்டே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் மலையகத்தமிழரை அணுக வேண்டும். மலைநாட்டில் அவர்கள் தமது உரிமைக்கும் நிரந்தர பாதுகாப்புக்கும், நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தல் தமிழ் ஈழத்துக்கு குடியகல்வோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அப்பிரதேச மக்களுடன் அவர்களை ஒருங்கிணைத்தல், இந்தியாவுக்கு குடியகல்வது நிரந்தர தீர்வாகாது எனப் பிரச்சாரம் செய்தல் - இதுவே தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தின் அணுகுமுறையின் அடிப்படையாயிருக்க வேண்டும்.

தமிழ் ஈழத்துக்கு ஏற்கன்வே வந்துள்ள இனிமேல்வரப் போகும் மலையகத்தமிழர்களை தமிழ் ஈழத்தவருடன் ஒருங்கிணைத்த, நிலச்சீர்திருத்த, சமூக சீர்திருத்த நடவடிக்கைகளின் அம்சமாக்கப்பட வேண்டும். எல்லைப்புறங்களை மட்டும் அவர்களுக்கு ஒதுக்காது ஏற்கனவே மக்கள் செறிந்துவாழும் கிராமங்களிலும் நகரங்களிலும் அவர்களுக்கு முடிந்தவரை குடியிருப்பு வசதிகளை வழங்க வேண்டும். மக்கள்மட்ட ஸ்தாபனங்களில் அவர்களின் பங்குபற்றலுக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

இன்றைய நிலையில் தமிழ் ஈழத்தில் பரம்பரையாக வாழ்ந்த மக்களுக்குக்கூடப் போதிய பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் இயக்கங்கள் உள்ளன. ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வடகிழக்கிலிருந்தே இந்தியாவுக்கு அகதிகளாக ஓடியுள்ளன. இந்த நிலையில் மலையகத் தமிழரை தமிழ் ஈழத்துக்கு குடியகலும்படி சொல்ல முடியுமா? அவர்களுக்கு இங்கு போதிய பாதுகாப்பு கொடுக்க யாரால் முடியும்? இன்று இராணுவ நடவடிக்கைகளில் மும்முரமாக இருக்கும் இயக்கங்களின் ஒரு முனைவாதப் போக்கினையும் ஸ்தாபன பலவீனங்களையும் இந்நிலை காட்டுகிறது. அடிப்படை சுய பாதுகாப்புச் சக்தி கொண்ட மக்கள்மட்ட அமைப்புக்களின் அவசியத்தை இந்த அனுபவம் மேலும் வலியுறுத்துகிறது. ஆனால் மக்கள் மட்டத்தில் அத்தகைய அமைப்புக்கள் பரந்த அளவில் தோன்ற தலைமைமட்டத்தில் அரசியல் கொள்கை மாற்றங்கள் வேண்டும்.

# 3

மக்கள் மட்டத்தில் இன்றைய சிறீலங்கா அரசின் அமைப்புக்களுக்கெதிரான மாற்றமைப்புக்கள் பற்றி ஆராயும் போது அரசின் சமீபகால ஸ்தாபன ரீதியான மாற்றங்களையும் சிங்கள தமிழ் பகுதிகளில் அவற்றின் வேறுபட்ட தாக்கங்களையும் பொதுத்தன்மைகளையும் சரியாகக் கணக்கிலெடுக்கவேண்டும். சிறீலங்கா அரசு கடந்த எட்டு ஆண்டுகளில் பல ஸ்தாபன ரீதியான மாற்றங்களைப் பெற்றுள்ளது. ஒரு பாசிச சர்வாதிகாரத்துக்குரிய ஸ்தாபன அடிப்படைகள் பெருமளவிற்குப் பூரணமாக்கப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் அரசின் பலப்படுத்தல் பெருமளவிற்கு தேசிய இனப்பிரச்சனையையும் அதன் முக்கிய அம்சமாகிவிட்ட தமிழீழ விடுதலையையும் காரணம் காட்டியே ஏற்படுத்தப்பட்டது. இதனால் அரசின் பலாத்கார கருவிகளினதும், அரசியலுடன் கருத்தமைவுடன் தொடர்பு கொண்ட கருவிகளினதும் செயற்பாடுகளின் தாக்கங்கள் விசேஷமான இன ரீதியான தன்மை வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. சிறீலங்கா அரசின் பாசிசத்தன்மைகளில் முக்கியமானவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(1) முழு இலங்கையிலும் இயங்கக்கூடிய இடதுசாரி தலைமைகொண்ட தொழிலாளர் வர்க்கஸ்தாபனங்களை, தொழிற்சங்கங்களை ஜனநாயக ரீதியான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்ப்புக்களில் ஈடுபடமுடியாதவகையில் அரசாங்கம் சிதறடித்துள்ளது. இதற்கு அரசஇயந்திரத்தை மட்டுமன்றி லும்பன் (Lumpan) குண்டர்பட்டாளங்களையும் பயன்படுத்துகிறது.

(2) சிங்களமக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக சக்திகள் சட்டபூர்வமான எதிர்ப்புக்களில் ஈடுபடமுடியாத வகையில் செய்ய மேலே குறிப்பிட்ட அதே வழிவகைகளைக் கையாண்டுவருகிறது அரசாங்கம். அதுமட்டுமன்றி சிங்கள எதிர்க்கட்சிகள் சிங்கள இனவாதத்தை மேலும் பலமாக்கும் பிரச்சாரங்களில் மட்டுமே சட்டபூர்வமாக செயற்படும் வகையில் ஜனரஞ்சக எதிர்ப்பை வழிநடத்தும் ஆற்றலையும் அரசு பெற்றுள்ளது.

(3) 1977-ல் கிடைத்த அபரித பாராளுமன்ற வெற்றியைப் பயன்படுத்தி யாப்புரீதியில் சர்வாதிகார அமைப்பொன்றுக்கு வேண்டிய சட்டரீதியான கட்டமைப்பை யு. என். பி. உருவாக்கியுள்ளது. அதேவேளையில் ''தமிழ் ஆபத்தை'' ''இந்திய ஆபத்தை'' காட்டி பயங்கரவேகத்தில் அரசின் இராணுவ யந்திரத்தைப் பலமாக்கியுள்ளது.

(4) வர்க்க அடிப்படையில் அமைந்த தொழிலாளர் ஸதாபனங்களைச் சிதறடித்த அதேவேளையில் சிங்களத் தொழிலாளர்களையும் பொதுமக்களையும் பெருமளவில் இனவாதப் பிரச்சாரத்துக்கூடாகத் தனக்குப்பின்னுல் இழுத்து வைத்துள்ளது. அரசாங்கம் ஒரு ''பொது ஆபத்தை''க் காட்டி சிங்களமக்களின் ஆதரவைப் பெற்றுள்ளதால் ''சிங்கள இனத்தின் பாதுகாப்புக்கு முதலிடம்'' என்ற கோஷத்தின் உதவியுடன் உடனடிப் பொருளாதாரப் பிரச்சனைகளிலிருந்து மக்களின்



கவனத்தை வெற்றிகரமாகத் திசைதிருப்ப முடிந்துள்ளது. சிங்களப் பேரினவாதக் கருத்தமைவு பாசிசத்தை நியாயப்படுத்தும் கருத்தமைவாக இன்று பயன்படுகிறது. பாசிசஅரசு தன்னைசிங்கள பௌத்த அரசாகவும் சிங்கள இனத்தின் பாதுகாவலனுகவும் காட்டிக் கொள்கிறது.

(5) யு. என். பி. யின் பாசிசவாதிகளான ஜயவர்த்தனு அத்துலத்முதலி போன்ருேருக்கும் ஆயுதப்படைகளின் முக்கியஸ்தர்களுக்குமிடையே நெருக்கமான உறவு வளர்ந்துள்ளது. தேசிய பாதுகாப்பின்பேரில் தமிழருக்கெதிராக சாதாரண சிங்களவர்களையும் ஆயுதபாணிகளாக்கக்கூடிய நிலையில் இந்த சிவிலியன் இராணுவக்கூட்டு இருக்கிறது. அத்துலத்முதலியின் பேச்சுக்கள் அசல் பாசிசபொப்பியூலிசத் தன்மைகள் கொண்டவை. சிங்களப் பத்திரிகைகள், வானெலி, தொலைக்காட்சி சகலமும் இதையே வெளிப்படுத்துகின்றன.

(6) தமிழ்ஈழத்தைப் பொறுத்தவரை பொதுநிர்வாகம், நீதிபரிபாலனம், இராணுவம் ஆகிய மூன்றும் ஒன்றிணைக்கப்பட்டு இராணுவ ஆதிக்கத்துக்கு முன்னைய இரண்டும் கீழ்படுத்தப்பட்டுள்ளன. இங்கு சிவில் நிர்வாகம் என்பதே நடைமுறையில் இல்லை. அத்துடன் பாராளுமன்றம், நகரசபைகள் கிராமசபைகள் என்பவற்றுக்கும் தமிழ் பிரதேசங்களுக்கும் ஒரு உறவுமில்லை. இங்கே அரசின் ஜனநாயக போர்வையும் அணிகலன்களும் முற்ருக நீக்கப்பட்டு அதன் பலாத்கார உள்ளடக்கம் பயங்கரநிர்வாணமாக வெறியாட்டம் போடுவதால் பாராளுமன்றவாதப் பிரமைகளுக்கு இடமேயில்லை. அடக்குமுறைக்கெதிராக ஆயுதப்போராட்டத்தைத் தவிர வேறு பாதையில்லை என்பது வெள்ளிடைமலை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிரியின் அதாவது சிறிலங்கா அரசின் பலத்தைக் குறைத்து மதிப்பிடமுடியாது. இந்தப் பலம் இராணுவ ரீதியானது மட்டுமன்றி அரசியல் ரீதியானதும். இன்றுவரை அரசாங்கத்துக்கு சிங்களமக்கள் மத்தியில் பரந்துபட்ட ஸ்திரமான ஆதரவு இருப்பதை யார்தான் காணமல் இருக்கமுடியும். அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியம், சியோனிசம் போன்றவற்றின் ஆதரவும் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளின் ஆதரவும் சிறிலங்கா அரசுக்கு இருந்துவருகின்றன. இத்தகைய ஒரு அரசுக்கெதிரான போராட்டம் தவிர்க்கமுடியாதபடி நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் அமைந்ததாயிருக்க வேண்டும். மக்களைப் பொறுத்தவரை இந்த அரசுக்கெதிரான போராட்டத்தின் ஆரம்பஅடிப்படை ஜனநாயக உரிமைகள். இதற்கூடாகவே பரந்த வெகுஜன அணிதிரட்டல் சாத்தியமாகும். இது சிங்கள மக்களுக்கும் பொருந்தும்.

தமிழ்மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் பாசிசத்துக்கெதிரான போராட்டம். அது சிங்களமக்களின் ஜனநாயக உரிமைகளையும் உதாசீனம்செய்யும் அரசுக்கெதிரான போராட்டம் என்ற செய்தி புதிய ஜனநாயகப்புரட்சிக்கான வேலைத்திட்டத்திலும் நடைமுறையிலும் ஒலிக்கவேண்டும். தமிழ்ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் சிங்கள புரட்சிகரசக்திகள் இன்று மிகவும் பலவீனமடைந்துள்ள போதும் அவற்றுடன் ஐக்கியப்படுதல் தமிழ்ஈழத்தில் புதிய ஜனநாயகப்புரட்சியின் வெற்றிக்கு அவசியம். தமிழ்மக்களின் விடுதலைக்கு சிங்கள மக்களின் ஆதரவு அவசியம் என்ற செய்தி தமிழ்மக்களிடமும் செல்லவேண்டும். இன்றைய அரசியல் நடைமுறைகள் இதைப்பற்றி சிரத்தை கொள்வதாகத் தெரியவில்லை. முழுஇலங்கையின் புரட்சிபற்றி சிந்திக்காது தமிழ்ஈழத்தின் சோஷலிசப்புரட்சிபற்றி சிந்திக்கமுடியாது. சிறிலங்காவில் ஒரு பாசிசஅரசு இருக்கும்வரை தமிழ் ஈழத்தில் புதிய ஜனநாயகப்புரட்சி ஆரம்ப வெற்றிபெற்றாலும் அதன் ஸ்திரப்பாடும் தொடர்ச்சியும் பலதடைகளை எதிர் கொள்ளவேண்டிவரும். குறிப்பாக சோஷலிசப்புரட்சி பாதிக்



கப்படும் அபாயங்கள் அதிகம். இங்கு அதிமுக்கியம் பெறும் சாத்தியக்கூறு ஒன்று உண்டு. அதுதான் தமிழ்ஈழத்துக்குள்ளே இருக்கும் முதலாளித்துவசக்திகள், வலதுசாரிசக்திகள் சோஷலிச மாற்றத்தைத் தடுப்பதற்காக சிங்கள அரசுடன் சமரசம் செய்யலாம். இந்தியஅரசும் இத்தகைய ஒரு போக்கினை ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தமிழ்ஈழத்து சோஷலிச சக்திகளின் கை ஓங்க சிங்கள முற்போக்குசக்திகளின் வளர்ச்சி அவசியம்.

இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்து தமிழ்ஈழவிடுதலையை நோக்குமிடத்து ஒரு நீண்ட புதிய ஜனநாயகப் புரட்சிக்காலகட்டத்துக்கு நாம் தயாராயிருக்கவேண்டும் என்றமுடிவு தவிர்க்கமுடியாதது. வர்க்கசக்திகளின் சமன்பாடு சோஷலிசத்துக்குச் சாதகமாகமாறும்வரை உழைக்க வேண்டும். தப்பான தந்திரோபாயங்களால் எதிர்ப்புரட்சியின் பக்கத்துக்கு நடுத்தரசக்திகளைத்தள்ளாது இருத்தல்முக்கியம். இதற்கு மக்கள் மட்டத்தில் பலமான புரட்சிகர அமைப்புக்களும் தலைமையும் தேவை. தொடர்ச்சியான புரட்சியே நமது இலட்சியமாயிருக்கவேண்டும்.

www.tamilarangam.net

# 4

இதுவரை புரட்சிகரக்கட்சியின் பங்குபற்றி நாம் ஆரா யவில்லை. புரட்சிகரக்கட்சி பற்றிப்பேசாது ஐக்கியமுன்னணி பற்றியும் இடைக்கால வேலைத்திட்டங்கள் பற்றியும் பேச முடியுமா? இல்லை. அப்படியாயின் முதலில் கட்சிஅமைத்தல் பின்னரே மற்றவை என்ற நிலைப்பாட்டுக்கு வருவதா? நமது நிலையில் இந்தக்கேள்விக்கும் இல்லையென்றே பதில் சொல்லவேண்டும். கட்சியமைப்பும் ஐக்கியமுன்னணி வேலை களும் சமகாலத்தில் தொடரப்படவேண்டிய வரலாற்றுச் சூழ்நிலையிலேயே தமிழ்ஈழவிடுதலைப் போராட்டம் நிற்கிறது. இன்றைய சந்தர்ப்பத்தின் விசேஷ குணம்சங்களை மனதில் வைத்தே கட்சி ஐக்கிய முன்னணி உறவினை நோக்கவேண் டும். இதுவரையிலான போராட்டம் கட்சியமைப்புக்களால் நடத்தப்பெறவில்லை. அதேநேரத்தில் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள இயக்கங்கள் பூரணமான ஐக்கிய முன்னணி அமைப்புக்களுமில்லை. இன்று இராணுவ ரீதியில் வளர்ந்து இயங்கிவரும் அமைப்புக்களின் அரசியல் தரத்தையும் தன் மையையும் ஒரு போல்ஷ்விக் கட்சிமாதிரியை வைத்து மதிப்பிடுதல் அர்த்தமற்றது. அரசியல் மட்டத்தைப் பொறுத்தவரை பலவகையில் இன்றைய இயக்கங்கள் சில தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாரிசுகள் என்றே சொல்லவேண்டும். இப்படிச்சொல்வது அவற்றிடம்



எதுவித புதுமையும் முற்போக்குத்தன்மைகளும் இல்லை என்பதாகாது. இன்று பூரணத்துவமற்ற நிலையில் இருக்கும் முற்போக்கான தேசிய உணர்வுக்கு இவ்வியக்கங்கள் வித் திட்டன ஆயினும் அவை அந்த உணர்வை ஒரு புரட்சிகர சமூக சக்தியாக மாற்றும் ஆற்றலை இதுவரை வெளிப்படுத் தவில்லை.

இராணுவவாதத்தின் வளர்ச்சி அரசியல் மட்டத்தின் வளர்ச்சியின் செலவிலேயே இடம்பெற்றுள்ளது. இராணுவ வாதம் இயக்கங்களின் வாழ்வுக்கு ஆபத்தை அதிகரிக்கும் போதெல்லாம் சில முக்கியமான இயக்கங்கள் பச்சைப்பயங் கரவாதத்துக்குள் இறங்கிவிடுகின்றன. இயக்கங்களுக் குள்ளே இராணுவவாதத்துக்கெதிராகப் போராட முற்படு வோர் ''களையெடுக்க'' படுகின்றனர். விமர்சக நோக்குள்ள ஈழப்போராளிகள், குழுக்கள்மீது எதேச்சாதிகார வன்முறை கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. இந்த நிலையில் இவ் வியக்கங்களிடையே கொள்கைரீதியான ஐக்கியம் ஏற்படுவது சுலபமில்லை. அதேபோல் இவற்றிடமிருந்து ஒரு புரட்சிகரக் கட்சி தோன்றுவதும் சுலபமில்லை.

ஆனால் நடைமுறை அனுபவங்களுக்கூடாக இயக்கங்க ளின் தவருன போக்குகளை உணர்ந்து பலர் குழுக்களாகவும் தனியன்களாகவும் வெளியேறிய வண்ணமிருக்கின்றனர். இந்தச் சக்திகளையெல்லாம் சிதறிப்போகவிடாது ஐக்கியப் படுத்தவல்ல பரந்த அமைப்பு அவசியம். இந்த அமைப்பு இத்தகைய சக்திகளுக்காகவென ஏற்படுத்தப்பட்டதாக அல்லாது ஒரு சுதந்திரமான விடுதலை இயக்கமாக இருக்க வேண்டும். இது பரந்த ஐக்கியத்தை நோக்காகக்கொண்டு இன்றைய தலைமைகளை விமர்சித்து இராணுவவாதத்தி லிருந்து தமிழ்ஈழப்போராளிகளை விடுவிக்க உழைக்கவேண் டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிகரக்கட்சியின் அமைப்பும் இத்தகைய பரந்த ஸ்தாபனத்தின் அமைப்பும் ஒன்ருகவே முன்னேறவேண்டும். புரட்சிகரக்கட்சிக்காக உழைப்பவர்கள் இருமட்டத்திலும் வேலைசெய்யவேண்டும். பரந்த அமைப்பை ஐக்கியமுன்னணி யின் முன்னேடியாக வளர்த்தெடுக்கவேண்டும்.

புதிய ஜனநாயகப்புரட்சியின் வெற்றிக்கு ஐக்கியமுன்னணி அவசியம். அதன் வழிகாட்டலுக்கும் புரட்சியின் நிரந்தரத் தைப் பேணிக்காக்கவும் புரட்சிகரக்கட்சி அவசியம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோஷலிசத்திற்கான முன் நிபந்தனைகளான உற்பத்தி சக்தியின் வளர்ச்சி, அரசியல் சமூக கலாச்சார வளர்ச்சி ஆகியவற்றைப் பூர்த்தி செய்யும் இடைக்கட்டமே புதிய ஜனநாயகப் புரட்சியின் காலகட்டம்.

---

ஆய்வகம், யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்